உ

திருச்சிற்றம்பலம்

# திருமுறைப் பயிற்சிக் கழகம்

## திருமுறைப் பாடத்திட்டம்

### நிலை இரண்டு

**தொகுப்பாக்கம்**

டாக்டர். ஆ. ரா. சிவகுமாரன்

சிவ ரா. பழனிவேல்

**ஒலிவட்டில் பாடியவர்**

தேவார இசைமணி சண்முக திருவரங்க யயாதி ஓதுவார்

அருள்மிகு செண்பக விநாயகர் கோயில்,

சிங்கப்பூர்

வெளியீடு

திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு

சிங்கப்பூர்

2013

# உள்ளடக்கம்


1. துதிப் பாடல்கள் ........ 5

**1.1** நற்றமிழ்வல்லநால்வர் துதி ........ 5

**1.2** திருஞானசம்பந்தர் தேவாரம் - பிடியதன் ........ 5

2. திருமுறைப் பாடல்கள் ........ 5

**2.1** திருஞானசம்பந்தர் தேவாரம் - உண்ணாமுலை ........ 5

**2.2** திருஞானசம்பந்தர் தேவாரம் - வெம்புந்திய ........ 6

**2.3** திருஞானசம்பந்தர் தேவாரம் - மடையில் ........ 6

**2.4** திருஞானசம்பந்தர் தேவாரம் - நலங்கொள் ........ 7

**2.5** திருநாவுக்கரசர் தேவாரம் - தலையே ........ 7

**2.6** திருநாவுக்கரசர் தேவாரம் - தேடி ........ 7

**2.7** திருநாவுக்கரசர் தேவாரம் - சொற்றுணை ........ 8

**2.8** திருநாவுக்கரசர் தேவாரம் - மாப்பிணை ........ 8

**2.9** திருநாவுக்கரசர் தேவாரம் - அன்னம் ........ 9

**2.10** திருநாவுக்கரசர் தேவாரம் - அல்லல் ........ 9

**2.11** திருநாவுக்கரசர் தேவாரம் - மதுர வாய்மொழி ........ 10

**2.12** சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பொன்னார் ........ 10

**2.13** சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - ஏரார் ........ 11

**2.14** மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்- பூசுவதும் ........ 11

**2.15** மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்- போற்றிஎன் ........ 12

**2.16** திருமாளிகைத் தேவர் - ஒளிவளர் விளக்கே ........ 12

**2.17** சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு - மன்னுக தில்லை ........ 13

**2.18** சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - வேதநெறி ........ 13

3. வாழ்த்துப் பாடல்கள் ........ 14

**3.1** வாழ்த்து - ஆறிருதடந்தோள் ........ 14

**3.2** வாழ்த்து - வான்முகில் ........ 14

4. உரைநடை ........ 15

**4.1** சைவ சமயம் ஓர் அறிமுகம் ........ 15

4.1.1 கடவுள் இயல் ........ 15

4.2.1 வரலாற்றுக் குறிப்பு ........ 33

**4.3** மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு ........ 34

4.3.1 வரலாற்றுக் குறிப்பு ........ 37

5. பயிற்சிப் பகுதி. ........ 38

*சில மாதிரி வினாக்கள்* ........ 38

6. பாடத்திட்ட நூலாக்கத்திற்குப் பயன்பட்ட நூல்கள் ........ 44

# 1. துதிப் பாடல்கள்

## 1.1 நற்றமிழ்வல்லநால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி.
ஊழிமலி திருவாதவூரர்திருத் தாள் போற்றி.

## 1.2 திருஞானசம்பந்தர் தேவாரம் - பிடியதன்

தலம்: திருவலிவலம்
திருமுறை: 1-123-5
பண்: வியாழக்குறிஞ்சி
தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

திருச்சிற்றம்பலம்

# 2. திருமுறைப் பாடல்கள்

## 2.1 திருஞானசம்பந்தர் தேவாரம் - உண்ணாமுலை

தலம்: திருவண்ணாமலை
திருமுறை: 1-10-1
பண் : நட்டபாடை

தாளம் : ரூபகம்

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடும் உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே.

திருச்சிற்றம்பலம்

## 2.2 திருஞானசம்பந்தர் தேவாரம் - வெம்புந்திய

தலம்: திருவண்ணாமலை

திருமுறை: 1-10-11

பண்: நட்டபாடை

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே.

திருச்சிற்றம்பலம்

## 2.3 திருஞானசம்பந்தர் தேவாரம் - மடையில்

தலம்: திருக்கோலக்கா

திருமுறை: 2-23-1

பண் : தக்கராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

திருச்சிற்றம்பலம்

## 2.4 திருஞானசம்பந்தர் தேவாரம் - நலங்கொள்

தலம்: திருக்கோலக்கா

திருமுறை: 2-23-11

பண் : தக்கராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்

## 2.5 திருநாவுக்கரசர் தேவாரம் - தலையே

பொது

திருமுறை: 4-9-1

பண் : சாதாரி

தாளம்: ரூபகம்

திருஅங்கமாலை

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்.

திருச்சிற்றம்பலம்

## 2.6 திருநாவுக்கரசர் தேவாரம் - தேடி

பொது

திருமுறை: 4-9-12

பண் : சாதாரி

தாளம்: ரூபகம்

திருஅங்கமாலை

திருச்சிற்றம்பலம்

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

## 2.7 திருநாவுக்கரசர் தேவாரம் - சொற்றுணை

தலம்: பொது

திருமுறை: 4-11-1

பண் : காந்தார பஞ்சமம்

தாளம்: ஆதி

நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

## 2.8 திருநாவுக்கரசர் தேவாரம் - மாப்பிணை

தலம்: பொது

திருமுறை: 4-11-10

பண் : காந்தார பஞ்சமம்

தாளம்: ஆதி

நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே

திருச்சிற்றம்பலம்

## 2.9 திருநாவுக்கரசர் தேவாரம் - அன்னம்

தலம்: **கோயில்**

திருமுறை: 5-1-1

ராகம்: நாதநாமக்கிரியா

தாளம்: ஆதி

தனித்திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

திருச்சிற்றம்பலம்

## 2.10 திருநாவுக்கரசர் தேவாரம் - அல்லல்

தலம்: கோயில்

திருமுறை: 5-1-4

ராகம்: நாதநாமக்கிரியா

தாளம்: ஆதி

தனித்திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

அல்ல லென்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயும்

தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே.

திருச்சிற்றம்பலம்

## 2.11 திருநாவுக்கரசர் தேவாரம் - மதுர வாய்மொழி

தலம்: **கோயில்**

திருமுறை: 5-1-11

ராகம் : நாதநாமக்கிரியா

தாளம் : ஆதி

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம் பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே.

திருச்சிற்றம்பலம்

## 2.12 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பொன்னார்

தலம்: திருமழபாடி

திருமுறை: 7-24-1

பண்: நட்டராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

திருச்சிற்றம்பலம்

## 2.13 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - ஏரார்

தலம்: திருமழபாடி

திருமுறை: 7-24-10

பண் : நட்டராகம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

ஏரார் முப்புரமும் மெரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே.

திருச்சிற்றம்பலம்

## 2.14 மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்- பூசுவதும் திருச்சாழல்

திருமுறை: 8-12-1

ராகம்: மோகனம்

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்
மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ.

திருச்சிற்றம்பலம்

## 2.15 மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம்-போற்றிஎன்

திருப்பள்ளியெழுச்சி

திருமுறை: 8-20-1

ராகம் பூபாளம்

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்

## 2.16 திருமாளிகைத் தேவர் - ஒளிவளர் விளக்கே

தலம்: கோயில்

திருமுறை: 9-1-1

இராகம் ஆனந்த பைரவி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருச்சிற்றம்பலம்

## 2.17 சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு - மன்னுக தில்லை

தலம்: கோயில்

திருமுறை: 9-29-1

இராகம்: ஆனந்த பைரவி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## 2.18 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - வேதநெறி

திருமுறை: 12-28--1

ராகம்: மத்தியமாவதி

திருச்சிற்றம்பலம்

வேதநெறி தழைத் தோங்க
மிகுசைவத் துறைவிளங்கப்

பூதபரம்ப ரைபொலியப்

புனிதவாய் மலர்ந்தழுத

சீதவள வயற்புகலித்

திருஞான சம்பந்தர்

பாதமலர் தலைக்கொண்டு

திருத்தொண்டு பரவுவாம்.

திருச்சிற்றம்பலம்

# 3. வாழ்த்துப் பாடல்கள்

## 3.1 வாழ்த்து - ஆறிருதடந்தோள்

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

ஆறிருதடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்

கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்

ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க

மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியாரெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## 3.2 வாழ்த்து - வான்முகில்

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்

கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க

நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

# 4. உரைநடை

## 4.1 சைவ சமயம் ஓர் அறிமுகம்

சமயமாவது மனிதர்கள் அறிவு விளக்கம் பெற்று உறுதி எய்தி, இன்பவாழ்வு அடைவதற்குச் சாதகமாகவுள்ள ஞான ஆலயமாகும்.

சமயம், மார்க்கம், மதம் என்னும் பதங்கள் ஒரே பொருள் உடையன. உலகம் தோன்றிய காலத்திலிருந்து எத்தனையோ சமயங்கள் தோன்றி மறைந்து போயின. உலகம் உண்டான காலத்திலிருந்து இன்று வரை இருப்பது சைவசமயம் ஒன்றே என்பது சைவர்களின் கருத்து.

சைவசமயம் எல்லாச் சைவமக்களுக்கும் அவரவர் பக்குவத்திற்கு ஏற்ற படிமுறையால் போதனைகளையும், சாதனைகளையும் வ குத்துள்ளது.

சைவசமயம் பூரணனாகிய சிவபெருமானால் உண்டாக்கப்பட்டபடியால் இச்சமயம் பூரணத்துவமான கொள்கைகளை உடையதாய் இருக்கின்றது.

“ வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி. மதித்திடுமின்!” என்று அறைகூவினர் நாவினுக்கு அரசர். இப்பிறவி பாவமானது அல்ல. இது இறைவன் நமக்குக் கொடுத்த பெருங்கொடை.

**4.1.1** கடவுள் இயல்

**1. உலகத்திற்கு முதலாக இருப்பவர் யார்?**

இறைவன்.

**2. இறைவனை எப்பெயர் கொண்டு சிறப்பாக அழைக்கின்றோம்?**

சிவபெருமான்.

**3. சிவபெருமான் என்று ஏன் அழைக்கின்றோம்?**

சிவம் என்ற சொல்லுக்குச் "செம்மை" (பூரணத்துவம்), "மங்களமானது" என்று பொருள். எல்லாவற்றிற்கும் மேலாக, முழுமையாக, தான் மங்களகரமாகவும் தன்னைச் சார்ந்தவர்களை மங்களகரமாக்குபவரும் ஆன இனிய இறைவனைச் சிவபெருமான் என்று அழைக்கின்றோம்.

**4. சிவபெருமான் எப்படிப் பட்டவர்?**

என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர்; தூயவர்; அழிவிலா இன்பம் உடையவர்; பிறர்க்கு ஆட்படாதவர்.

**5. சிவபெருமானை நாம் ஏன் தொழ வேண்டும்?**

சிவபெருமானைத் தொழுவதால் சிவபெருமானுக்கு எந்தப் பயனும் இல்லை. ஆனால், அழிவில்லாதவரும் இன்ப மயமானவருமான சிவபெருமான் தம்மைத் தொழுபவர்களுக்கு அந்த அழிவில்லாத இன்பத்தை அடைய அருள் புரிவார். உலகியலில் தோன்றும் இன்பங்கள் நிலையானவைகள் அல்ல. ஆனால் சிவபெருமான் அருளும் இன்பத்தைப் பெற்றவர்கள் என்றென்றும் இன்பத்தைப் பெற்று மகிழ்ந்திருப்பர். அதனால் இந்த உடல் எடுத்ததன் பயன் சிவவழிபாடு செய்து அந்தப் பேரின்பத்தை அடைவதே.

**6. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யும் தொழில்கள் யாவை?**

படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்துமாம்.

**7. படைத்தலாவது யாது?**

ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களை முதற் காரணத்தினின்றும் தோற்றுவித்தல்.

**8. காத்தலாவது யாது?**

தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை நிறுத்தல்.

**9. அழித்தலாவது யாது?**

தனு கரண புவன போகங்களை முதற்காரணத்தில் ஒடுக்குதல்.

**10. மறைத்தலாவது யாது?**

ஆன்மாக்களை இருவினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் அமிழ்த்தல்.

**11. அருளலாவது யாது?**

ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவதத்துவத்தை விளக்குதல்.

**12. தனு கரண புவன போகம் என்பன என்ன?**

தனு - உடம்பு, கரணம் - மன முதலிய கருவி, புவனம் - உடம்புக்கு ஆதாரமாகிய உலகம், போகம் - அனுபவிக்கப்படும் பொருள்.

**13. சக்தி என்னும் சொல்லுக்குப் பொருள் யாது?**

வல்லமை

**14. சிவபெருமான் உயிர்களுக்கு அருள் செய்யும் பொருட்டு உமையோடு எழுந்தருளியுள்ள முதன்மைஇடம் யாது?**

திருக்கயிலை மலை.

**15. திருக்குடும்பத்தின் உறுப்பினர்கள் யாவர்?**

சிவபெருமான், பார்வதிதேவி, விநாயகர், முருகர்.

**16. சிவபெருமான் உயிர்களுக்கு எவ்வெவ்விடங்களில் நின்று அருள் புரிகின்றார்?**

சிவலிங்கம் முதலிய திருமேனிகளிடத்தும், சைவாசாரியாரிடத்திலும், சிவனடியாரிடத்திலும் நின்று அருள் செய்வார்.

**17. சிவபெருமானை முழுமுதற் பொருளாக வழிபடும் சமயத்திற்குப் பெயர் யாது?**

சைவம்

**18. சைவத்தில் தலையாய நூல்கள் யாவை?**

பன்னிரு திருமுறைகள்.

**19. சைவ சமய நூல்களில் விதிக்கப்பட்டன யாவை?**

சிவ புண்ணியமும் சீவ (உயிர்) புண்ணியமுமாம்.

**20. சிவ புண்ணியம் யாது?**

சிவமே முதல் எனக் கருதிச் செய்யப்படும் அனைத்தும் சிவ புண்ணியமாம்.

**21. உயிர்ப் புண்ணியம் (சீவ நன்மை) யாது?**

1. கடவுளை வழிபடல், 2. தாய், தந்தை, ஆசான் முதலானவகளைப் பேணுதல், 3. உயிர்க்கு இரங்குதல், 4. உண்மை பேசுதல், 5. செய்நன்றி அறிதல் முதலாயின.

**22. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?**

சிவ புண்ணியங்களைச் செய்தவர் சிவ இன்பத்தையும், சீவ ( உயிர் ) புண்ணியங்களைச் செய்தவர் சுவர்க்க இன்பத்தையும் அனுபவிப்பர்.

**23. பாவங்கள் ஆவன யாவை?**

கொலை, களவு, கள் குடித்தல், ஊண் உண்ணல், பொய் பேசுதல், சூதாடுதல்.

**24. சைவ சமயத்தோர் உடம்பில் அணிய வேண்டிய அடையாளம் யாது?**

திருநீறு, உருத்திராக்கம்.

**25. சைவர்கள் முறையாக எண்ண வேண்டிய மூல மந்திரம் யாது?**

திருவைந்தெழுத்து. **"சிவாயநம, நமசிவாய"** என்ற மந்திரங்களாகும்.

## 4.2 சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு.

கயிலாயத்தில் சிவபெருமானுக்கு மலர் பறித்துத் தொடுத்துத் தரும் பணியை மேற்கொண்டிருந்தவர் ஆலால சுந்தரர்.

ஒருநாள் அவர் மலர் பறித்து வரச் சென்றபோது அநிந்திதை, கமலினி என்ற இரு மங்கையரைக் கண்டு மையல் கொண்டார். ஆதலால் சிவபெருமான் அவரை மண்மீது பிறக்க வேண்டும் என ஆணையிட்டார். அப்போது சுந்தரர் தாம் மண் உலகில் பிறந்து உலகியிலில் மூழ்கிவிடாமல் தடுதாட் கொள்ளவேண்டும் என வேண்டினார். இறைவனும் அவ்வாறே அருள் செய்தார்.

ஆலால சுந்தரர் இறைவரின் ஆணைப்படி திருநாவலூரில் சடையனாருக்கு மகனாய்த் தோன்றினார். அப்போது அவர்க்குப் பெற்றோர் இட்ட பெயர் நம்பியாரூரர். அவர் ஒருகால் தெருவில் விளையாடிக் கொண்டிருந்தபோது திருமுனைப்பாடி நாட்டு மன்னர் நரசிங்க முனையரையர் அவரைப் பார்த்து மகிழ்ந்து தந்தையாரின் அனுமதியைப் பெற்று அவரைத் தன் மகனாகக் கொண்டார்.

அரசர் மனையில் வளர்ந்தாலும் அந்தணர்க்குரிய ஒழுக்கத்திலேயே அவர் நின்றார். அவர்க்கு மணப்பருவம் வந்து வாய்த்தது. புத்தூர் சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைத் தம்மகனுக்கு மணம் பேசி முடித்தார் சடையனார்.

புத்தூரில் திருமணம் நிகழத் தொடங்கியது. அப்போது அம்மணப் பந்தலில் சிவபெருமான் முதிய அந்தணர் கோலத்தில் வந்தார். சுந்தரர் தமக்கு அடிமை என்று முதியவர் உரைத்தார். அவையோர் வியந்தனர். சுந்தரர் முதியவர் காட்டிய ஓலையை வாங்கிக் கிழித்து எறிந்தார். அதைக்கண்ட முதியவர் நகைத்து அந்த ஓலை, படி ஓலை என்றும், உண்மை ஓலை தம்மிடம் இருப்பதாகவும் உரைத்தார், சுந்தரர். "ஓர் அந்தணர் மற்றோர் அந்தணருக்கு அடிமையாவது உண்டோ! நீர் பித்தரோ!" என்றார். "நான் பித்தனோ அல்லது பேயனோ, எப்படியானாலும் ஆகுக! நீ எனக்கு அடிமை செய்ய வேண்டும்! என்றார், முதியவர், மேலும் தமது இருப்பிடம் திருவெண்ணெய் நல்லூர் என்று உரைத்தார். அப்படியாயின் வழக்கை அங்குள்ள அவையோரிடம் தொடுக்கலாம்" என்று அவையோர் உரைத்தனர். அனைவரும் இசைந்தனர். திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றனர்.

அங்கு நம்பியாரூரரின் பாட்டனார் கையெழுத்துள்ள ஓலையை வரவழைத்து முதியவரின் ஓலையுடன் ஒத்துப் பார்த்தனர். உண்மையை உணர்ந்தனர். "நீ இவர்க்கு அடிமையே" என்று திருவெண்ணெய் நல்லூர் அவையோர் உரைத்தனர். உரைத்துப் பின் முதியவரின் இல்லத்தைப்

பற்றி வினவினர். அவர் தம் இல்லத்தைக் காட்டுவதாகச் சொல்லித் "திருவருட்டுறை" என்ற அவ்வூர்க் கோயிலுக்குள் புகுந்தார். அவரைப் பின்தொடர்ந்து சென்ற எவரும் அதன்பின் அவரைக் காணவில்லை! அப்போது இறைவன் தம் காளையூர்தியில் அமர்ந்து காட்சி தந்தருளித் தாம் அவரை ஆட்கொண்டதாக உரைத்தார். நம்பியாரூரர் பசுவின் குரல் கேட்ட கன்றைப்போல் ஆனார். உடல் புளகித்து நின்றார் கண்கள் நீரைச் சொரிந்தன. இறைவன் அவரைப்பார்த்து, "நான் கூறியதை மறுத்து நீ பேசியதால், "வன்தொண்டன்" என்ற பெயரை உமக்குத் தந்தோம். நமக்கு அருச்சனையாவது பாட்டே ஆகும். எம்மை பாடுக! என்று அருள் செய்தார். சுந்தரர் "யான்நின் அருட் பெருங்குணக்கடலில் எதை எண்ணிப் பாடுவேன்?" என்று வினவினார். அதற்கு எம்பெருமான், "நீ என்னை மணப்பந்தலில் பித்தன் என்று பேசினை. எனவே "பித்தன்" என்றே என்னைப் பாடுக என்றார். நம்பியாரூரர் "பித்தா பிறைசூடி" என்ற தொடக்கம் உடைய பதிகத்தைப் பாடினார்.

பின்னர் அவர் பல தலங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள திருமூர்த்திகளை வணங்கப் புறப்பட்டார். திருநாவலூர், முதலான பதிகளுக்குச் சென்று வணங்கித் திருவதிகை என்ற பதிக்கு வந்தார்.

திருவதிகை திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்யப் பெற்ற தலம். ஆதலால் அதனை மிதித்துச் செல்ல விரும்பாது அருகில் இருந்த சித்தவடம் என்னும் மடத்தில் தங்கினார். உடன் வந்த அடியார்களோடு அதிகை வீரட்டானேஸ்வரரை இடைவிடாது எண்ணிய வண்ணம் துயின்றார். இறைவன் முதிய அந்தணர் வடிவம் பூண்டு யாரும் அறியாதபடி புகுந்து சுந்தரர் தலையின் மேலே தமது திருவடி படும்படியாக வைத்துத் துயில் கொள்வாரைப் போன்று இருந்தார். உடனே நம்பியாரூரர் விழித்து எழுந்து ``அருமறை யோனே! உன் அடிகளை என் தலைமேல் வைத்தனையே`` என்று கேட்டார். ``நீர் துயிலும் திசையை அறியாவகை செய்தது என் முதுமை`` என்றார் அந்தணர். நம்பிகள் வேறொரு திசையில் தலையினை வைத்துத் துயில்கொள்ளத் தொடங்கினார். மீண்டும் அம் முதியவர் நாவலூரர் தலைமேல் தம் திருவடிகளை நீட்டிப் பள்ளி கொண்டார். நாவலூரர் எழுந்து இவ்வாறு பலதடவை மிதிக்கும் நீர் யார் என்று சினந்து கேட்டார். உடனே முதியவர் ``என்னை நீ இன்னும் அறிந்திலையோ`` என்று கூறியவாறு மறைந்தருளினார். அம்மொழி கேட்ட ஆரூரர் தம் முடியில் திருவடி வைத்தருளியவர் சிவபிரானே என்று தெளிந்து தம் பொருட்டு எளிவந்தருளிய எம்பெருமானைக் காணப்பெற்றும் ``அறியாமையால்

இறுமாந்து இகழ்ந்துரைத்தேனே`` என்று வருந்தித் ``தம்மானை அறியாத சாதியார் உளரே`` என்று தொடங்கித் திருப்பதிகம் பாடித்துதித்தார்.

பின் சிதம்பரத்துக்குச் சென்று கூத்தப் பெருமானை வணங்கினார். இறைவர், அவரைத் திருவாரூர்க்கு வருமாறு பணித்தார்.

வன் தொண்டரான சுந்தரர் திருவாரூர்க்குச் சென்று இறைவரை வணங்கியபோது இறைவர், "இன்று முதல் நீ எனக்குத் தோழன்" என்று அருள் செய்தார். அன்று முதல் அவர் "தம்பிரான் தோழர்" என அழைக்கப்பெற்றார்.

கயிலை மலையில் இறைவிக்குப் பணிசெய்து வந்த அநிந்திதை அத்திருவாரூரில் கணிகையர் குலத்தில் பிறந்து பரவை என்ற பெயருடன் வளர்ந்து வந்தார்.

அவர் வழக்கம் போல் திருவாரூர் தியாகேசப்பெருமானை வணங்கக் கோயிலுக்குச் சென்றார். அங்கு அழகோவியமாக விளங்கிய பரத்தையாரை மன்மதன் போன்ற சுந்தரர் பார்த்தார். "கற்பகத்தின் பூங்கொம்போ ! காமன்தன் பெருவாழ்வோ ! புண்ணியத்தின் புண்ணியமோ ! " என்று வியந்தார்.

பரவையாரும் சுந்தரரின் சுந்தரக் கோலத்தில் ஈடுபட்டார். கண்ணோடு கண் நோக்கினர். இருவரது இதயங்களும் கலந்தன.

சுந்தரர் அந்தப் பரவையாரைப் பற்றி விசாரித்து அறிந்துகொண்டார். பரவையாரும் அவ்வாறே சுந்தரரைப் பற்றி உசாவி அறிந்து கொண்டார். அவ்விருவர் மனக்கருத்தையும் அறிந்த இறைவர் அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்குமாறு அடியார்களுக்குப் பணித்தார்.

திருமணம் நிகழ்ந்தது.

அவர்கள் வாழ்வு இன்பமயமாய் ஆகியது. ஒருநாள், அவர் கோயிலுக்குச் சென்றபோது சிவனடியார்களைப் பார்த்து "இவர்களுக்குகெல்லாம் நான் ஆளாவது எந்நாள்?" என்று உருகினார். இறைவர் அந்த அடியார்களைப் பாடுமாறு பணித்துத் "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று அடியெடுத்துத் தந்தார். சுந்தரர் உள்ளம் மகிழ்ந்து "திருத்தொண்டத் தொகையை" - அவ்வடியார்களின் புகழ் முதலியவற்றை - விரித்து ஓதினார். "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்பது பதிகத்தொடக்கம்.

சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடியபின் திருவாரூரில் தங்கியிருந்தார். குண்டையூர் கிழார் என்பவர் சுந்தரரிடம் பேரன்புக்கொண்டவர். செந்நெல், ஆவின் பால், இனிய காய் கனிகள் முதலியவற்றை அவர் சுந்தரர்க்கு அளித்து வந்தார். இவ்வாறு அவர் செய்து வந்த தொண்டுக்கு இடையூறு உண்டாயிற்று. அதாவது நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் குண்டையூர்க் கிழாரால் முன்புபோல்

செந்நெல் முதலியவற்றைத் தரஇயலவில்லை. அதனால் அவர் வருந்தியவாறு உறங்கினார். அவர் கனவில் இறைவன் தோன்றி "நம்பியாரூரர்க்காக உமக்கு நெல் தந்தோம்!" என்று அருள் செய்தார். நெல் மலை மலையாகக் குவிந்து கிடந்த்து. அவற்றை அனுப்ப இயலாது என எண்ணிக் குண்டையூர் கிழார் சுந்தரர்க்குச் செய்தி உரைத்தார். சுந்தரர் புறப்பட்டுக் குண்டையூர்க்குச் சென்றார் நெல்மலையைக் கண்டு திகைப்புக் கொண்டார். "இறைவன்தான் அந்த நெல்மலையை கொண்டுவர உதவ முடியும்" என்று எண்ணினார் சுந்தரர். எனவே "நீள நினைந்தடியேன்" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். அப்போது அசரீரி " இன்று இரவு இந்நெல் திருவாரூரில் இருக்கும்" எனக் கூறியது. அதனைக் கேட்டுத் தம்மூர்க்குத் திரும்பிய சுந்தரர் பரவையாருக்கு உரைத்தார்.

அன்றைய இரவு குண்டையூர் நெல்மலை பூதகணங்களால் திருவாரூர்க்கு எடுத்துச் செல்லப்பட்டது . பரவையார் மாளிகையில் மட்டுமின்றித் திருவாரூர்த் தெருக்கள் எல்லாம் நெல் நிறைந்து காணப்பட்டது. பரவையார் அவரவர் வீட்டு எல்லையில் உள்ள நெல்லை அவரவர்களே எடுத்துக் கொள்ளலாம் என்றார். இறையருளை வியந்து சுந்தரர் தொழுதார்.

கோட்புலி நாயனார் என்பவர் ஒருகால் சுந்தரரிடம் வந்து, "தம் ஊரான திருநாட்டியத்தான் குடிக்கு வருதல் வேண்டும்" என வேண்டினார். அவர் வேண்டுகோளுக்கு இரங்கி நாட்டியத்தான் குடியை அடைந்தார். அங்கு அவர் சுந்தரரை வணங்கிச் சந்தனம். கஸ்தூரி, கற்பூரம் முதலியவற்றை அளித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். பின்னர் நல்ல விருந்தினை அளித்தார்.

அக்கோட்புலியார்க்குச் "சிங்கடியார்", "வனப் பகையார்" என்ற இரு மகளிர் உண்டு. "அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்" எனச் சுந்தரரை வேண்டினார். சுந்தரர் அவர்கள் "என் மக்கள்" என்று அன்பு பாராட்டினார் அவர்களை மடியில் இருத்தி உச்சி மோந்து அன்பு பாராட்டினார். கோட்புலியாரைப் "பூணாவதோர்" என்ற பதிகத்தில் பாராட்டிச் சிறப்பித்தார்.

ஒவ்வோர் ஆண்டிலும் பங்குனி உத்திரத் திருநாளில் பரவையார் அடியார்களுக்குப் பொருள் அளிப்பது வழக்கம். அந்த ஆண்டில் அவ்வாறு அளிக்க அவரிடம் பொருள் இல்லை. அவர் திருப்புகலூர் சென்று இறைவனை வழிபட்டார். இறைவன் பொருள் தரவில்லை. அதனால் கோயிலின் வெளிமுற்றத்தில் தங்கியிருந்தார். அங்குள்ள செங்கற்களைத் தலையணையாய்க் கொண்டு உறங்கினார். அந்தச் செங்கற்கள் பொற்கட்டிகளாய் ஆயின. ஆகவே, வியப்புக் கொண்டு இறைவரை நினைந்து, "தம்மையே புகழ்ந்து" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடினார். அப்பொற் கட்டிகளை எடுத்துக்கொண்டு திருவாரூர்க்குத் திரும்பினார்.

பின் அவர் திருவீழிமிழலை அந்தணர் வரவேற்க, அவ்வூரை அடைந்தார். அவ்வூரை வணங்கிப், பக்கத்தே உள்ள திருவாஞ்சியம், அரசிக்கரைப்புத்தூர் முதலான பதிகளை வணங்கினார். அதன்பின் திருவிடைமருதூர், திருக்கலயநல்லூர், திருவலஞ்சுழி ஆகிய தலங்களை வணங்கித் திருவாலம் பொழிலை அடைந்தார். அப்போது அவரது கனவில் தோன்றித் "திருமழபாடிக்கு வர மறந்தனையோ!" என்று வினவினார். எனவே அவர் மறுநாள் திருமழப்பாடிக்குச் சென்றார். அங்குப் "பொன்னார் மேனியனே" எனப் பதிகம் பாடினார். பல பதிகளை வணங்கி, அவர் திருவானைக்கா என்ற தலத்தை அடைந்தார். அவ்வூரில் உறையூர்ச் சோழனின் மணியாரத்தைப் பூண்டார்.

அங்கிருந்து சுந்தரர் திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைந்தார். இறைவனிடம் பொருளைப் பெற எண்ணினார். இறைவன் அருளவில்லை அதனால் வருந்தினார். பின்னர் இறைவன் பெரும் பொருளைத் அளித்தார்.

திருப்பாண்டிக் கொடுமுடியை வணங்கி திருப்பேரூரை அடைந்தார். அங்கு இறைவரின் ஆடிய கோலம் அவர்க்குக் கிடைத்தது. பின் பலபதிகளை வணங்கிய சுந்தரர், திருமுதுக்குன்றத்திற்குச் செல்லாலானார். அப்போது இறைவன் அந்தணர் கோலத்தில் வந்து வழித்துணையாய் இருந்து, பின் மறைந்து போனார். சுந்தரர் கூடலை யாற்றூருரை வணங்கித் திருமுதுக்குன்றத்துக்கு வந்தார். எம்பெருமானை நினைந்து "மெய்யை முற்றப் பொடி பூசி" என்ற பதிகத்தைப் பாடினார். ஈசன் அவர்க்குப் பன்னீராயிரம் பொற்கட்டிகளைத் தந்தார்.

அவர் பெரிதும் மகிழ்ந்து "இப்பொற்கட்டிகளைத் திருவாரூரில் உள்ளவர் வியப்பு அடையும்படி அங்கு வரும்படி செய்ய வேண்டும்" என்றார். இறைவர் "இங்குள்ள மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர் குளத்தில் இப்பொற்கட்டிகளை எடுத்துக் கொள்க" என்றார். ஒத்திட்டுப் பார்ப்பதற்க்காகப் பொற்கட்டியில் சிறிது வெட்டி எடுத்துக்கொண்டு சுந்தரர் அப்பொற்கட்டிகளை மணி முத்தாற்றில் இட்டார். சிதம்பரம், திருக்கருப்பறியலூர், திருவேள்விக்குடி முதலிய தலங்களை வணங்கிச் சுந்தரர் திருவாரூரை அடைந்தார். திருமுதுக்குன்றத்தில் நிகழ்ந்ததைச் சுந்தரர் பரவையாருக்கு உரைத்தார். தாம் பொன் எடுக்கக் குளத்திற்குச் செல்வதாகவும் தம்முடன் வருமாறு பரவையாருக்கு அவர் உரைத்தார். பரவையாருக்கு வியப்பு ஏற்பட்டது. சுந்தரருடன் சென்றார்.

சுந்தரர் குளத்தினை அடைந்து, பரவையார் கரைமேல் நிற்க, இறைவரைத் துதித்துக் குளத்தில் பொன்னைத் தடவித் தேடினார். அவரது பாடலைக் கேட்க இறைவர் விரும்பியதால்,பொன்̈த் தரவில்லை. எனவே பரவையார் "ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடுபவரே! இறைவர் அருள்

இதுவோ" என நகைத்தார். உடனே தமக்குப் பொன்னைத் தரும்படி சுந்தரர் பதிகம் பாடினார். அப்போது அவரது கையில் பொன் கிடைத்தது. முன் வெட்டி எடுத்த பொன் உள்ளதா என ஒப்பிட்டுப் பார்த்தார். மாற்றுயர்ந்த பொன்னாய் இருக்கக் கண்டு மகிழ்ந்தார். சில நாட்கள் சென்றன. பின்னர், சுந்தரர் திருநள்ளாறு, திருக்கடவூர், திருநின்றியூர் முதலிய தலங்களை வணங்கித் திருக்கோலக்காவை அடைந்தார். இறைவர் சம்பந்தருக்குப் பொன் தானம் தந்த தலம் அது! அதைச் சிறப்பித்துப் பாடினார் சுந்தரர். அவ்வூரை விட்டகன்ற சுந்தரர் திருக்குருகாவூரை அடைந்தார். தாகத்தாலும் பசியாலும் அவர் வருந்தினார். இறைவர் கட்டுச் சோற்றுடன் அவர் செல்லும் வழியில் காத்திருந்தார். சுந்தரர் வந்தபோது அவர்க்கு உணவை அளித்துப் பசியைப் போக்கியருளினார். சுந்தரருடன் வந்தவரும் உணவு உண்டு மகிழ்ந்தனர். இறைவர் மறைந்தருளினார்.

அடியாருடன் சுந்தரர் திருத்தினை நகர், திருநாவலூர், திருக்கழுக்குன்றம் முதலான பதிகளை வணங்கித் திருக்கச்சூரை அடைந்தார். அங்குக் கோயிலுக்குப் போய் இறைவனை வணங்கினார். அவருடன் வரவேண்டிய பரிவாரங்கள் வந்து சேரவில்லை. ஆதலால் அவர் பசியுடன் இருந்தார். அதை இறைவர் பொறுத்துக் கொள்வாரோ! ஓர் அந்தணர் போல் கோலம் கொண்டு ஓடேந்தி போய் இல்லந்தோறும் இரந்து வந்து சுந்தரர்க்குப் பசியாற்றினார். பின் இறைவர் மறைந்தருளினார். மறையவராய் வந்து ஓடேந்தி இருந்து உணவளித்தவர் இறைவரே என்பதை உணர்ந்தார் சுந்தரர். "முதுவாயோரி கதற" என்ற தொடக்கம் கொண்ட பதிகத்தைப் பாடினார். மகிழ்ந்தார். அங்கிருந்து புறப்பட்டுச் சென்று காஞ்சிபுரம், முதலிய பதிகளை வழிபட்டுத் திருக்காளத்தியை அடைந்தார். அங்கிருந்தபடியே சீபர்ப்பதம், திருக்கேதாரமலை முதலியவற்றைப் போற்றிப் பதிகம் பாடித் திருவொற்றியூரை அடைந்தார். அவ்வூர் அடியவர்கள் அவரை வரவேற்றனர்.

ஞாயிறு என்ற ஊரில் வாழ்ந்த ஞாயிறுகிழார் என்பவர்க்குச் "சங்கிலி" என ஒரு மகள் பிறந்தாள். அவள் முன்னம் கயிலாய மலையில் இருந்தா அநிந்திதையே ஆவார். அம்மங்கையார் மணப்பருவம் எய்தியிருந்தார்.

அவர்க்குத் தக்க மணமகனைப் பெற்றோர் தேடினர். தமக்கு மணம் செய்ய மனமகனைத் தேடுவது சங்கிலியார்க்கு வருத்தத்தை தந்தது. "நான் இறைவனின் திருவருள் பெற்றவர்க்கே உரியவள்!" என்று எண்ணினார், மயங்கினார். அதைக் கண்டு பெற்றோர் துடித்தனர். அலறினர். பனிநீரை முகத்தில் தெளித்தனர். சங்கிலியார் தெளிவு பெற்றார். பெற்றோர் அவரை "உனக்கு யாது நேர்ந்தது?" என்று வினவினர். அவர் "நீங்கள் என்

திருமணம் பற்றிப் பேசியதை நான் கேட்டேன். நான் இறைவன் திருவருள் பெற்றவர்க்கே உரியவள். நான் ஒற்றியூர் செல்வேன்! இறைவன் அருள்வழி நிற்பேன்!" என்றார். பெற்றோர் வியப்புக் கொண்டனர். அவள் கூறியதை வேறு எவர்க்கும் கூறவில்லை.

அவளுடைய உறவினன் ஒருவன் தனக்குச் சங்கிலியாரை மணம் பேசி முடிக்க பெரியோரை அனுப்பினான். வந்தவர்க்கு ஏற்றவாறு விடை சொல்லி அனுப்பினர் பெற்றோர். மணம் பேச வந்தவர் திரும்பிச் செல்வதற்குள் மணம் பேச அனுப்பியவன் இறந்தான். எனவே சங்கிலியாரை மணம் பேசுபவர் இறப்பர் என்பதைப் பெற்றோர் சுற்றத்தார்க்கு அறிவித்தனர். சங்கிலியாரைத் திருவொற்றியூரில் கன்னி மாடத்திற்கு அனுப்பி வைத்தனர். அவர் அங்கிருந்து தவம் மேற்கொண்டிருந்தார். அவ்வூர்க் கோயில் மலர் மண்டபத்தில் இருந்து மாலை தொடுத்து இறைவனுக்கு அளிப்பது வழக்கம்.

சுந்தரர் வினைப்பயன் அவரைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றது. இறைவனை வணங்கிப் பதிகம் பாடி வெளியே வந்தார். வெளியே வருபவர் மலர் மண்டபத்தை அடைந்தார். அங்கிருந்த சங்கிலியாரைச் சுந்தரர் கண்டார். அவரது உள்ளம் அம்மையாரிடம் சென்றது. "இவள் என் மனத்தைப் பிணித்தாள். இவளை இறைவனிடம் வேண்டிப் பெறுவேன்" என்று எண்ணினார். "இங்கு உமக்கு மலர் மாலை தொடுத்த மங்கை என் உள்ளமான மாலையை அவிழ்த்தாள்! அவளை அடியேனுக்குத் தந்தருள வேண்டும்!" என வேண்டினார். இறைவன் எழுந்தருளி "அவளை உமக்கு அளிப்போம். நீவிர் உள்ளம் வருந்த வேண்டா" என்று கூறினார். பின், இறைவர் சங்கிலியாரின் கனவில் தோன்றி "என்னிடம் அன்புடையவன் சுந்தரன். அவனை நீ மணம் கொண்டு மகிழ்க" என்றார்.

சங்கிலியார், "நான் தங்கள் ஆணையை மேற்கொண்டேன். ஆயினும் அவர் திருவாரூரில் உள்ள பரவையாரிடம் செல்வார். அங்ஙனம் செல்லாதவாறு அருள் செய்ய வேண்டும்!" என்றார்.

உடனே சுந்தரரிடம் இறைவர் சென்றார்.

"நான் சங்கிலியாரை உன்னை மணக்குமாறு சொன்னேன். அவருக்கு ஒரு குறையுண்டு. அதனை போக்க வேண்டியது உன் கடமை என்றார்.

சங்கிலியார் சுந்தரரிடம் "நான் உன்னைப் பிரியேன்" என்று எனக்குச் சத்தியம் செய்து தர வேண்டும்" என்றார். அவ்வாறே தாம் கோவிலில் வைத்துச் சத்தியம் செய்வதாயும் சுந்தரர் கூறினார். சுந்தரர் இறைவனிடம் சென்று சத்தியம் செய்யக் கோயிலுக்குள் வருவதால், இறைவன் அங்கு இல்லாது மகிழ மரத்தின் அடியில் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். "நீ சொன்னபடியே!" என்றார் இறைவர். பின்

இறைவர் சங்கிலியாரிடம் போய் "சுந்தரன் சத்தியம் செய்யக் கோயிலுக்குள் வந்தால், நீ மகிழ மரத்தடிக்கு வரும்படி அவனை அழைக்க வேண்டும்" என்றார். சங்கிலியார் மகிழ்ந்தார். தம் தோழியருக்கு இறைவரின் அருட் செயலைச் சங்கிலியார் உரைத்தார்.

மறுநாள் சுந்தரர் சங்கிலியாரை எதிர்நோக்கிக் கோயிலின் முன் நின்றார். சத்தியம் செய்யக் கோயிலுக்குள் வரும்படி சுந்தரர் உரைத்தார். சங்கிலியாரோ அவரை மகிழ மரத்தடிக்கு அழைத்தார். சுந்தரர்க்கு அதைக் கேட்டதும் திகைப்பு ஏற்ப்பட்டது! வேறு வழியின்றி அவரது கருத்திற்கு இசைந்தார் சுந்தரர். மகிழ மரத்தின் அடியில் "நான் உன்னைப் பிரியேன்?" என்று சூள் உரைத்தார் சுந்தரர். அதைக் கேட்டதும் சங்கிலியார் உள்ளம் மகிழ்ந்தார். "இறைவர்க்கு முன் சூள் உரைப்பது இயற்கைக்கு மாறான செயல்! இப்படி நிகழ்கின்றதே!" என அவர் கலங்கினார். இறைவர் அங்கிருந்து மறைந்தார். சுந்தரர் உள்ளே சென்று இறைவரை நொந்து கொண்டார். முன்னமே சிவபெருமான் அடியார்களுக்கு, சுந்தரர்க்கும் சங்கிலியார்க்கும் மணம் செய்து வைக்கும்படி கூறியிருந்தார். அவர்கள் அந்த இருவர்க்கும் மணம் முடித்து வைத்தனர். அவர்கள் இருவரும் உள்ளம் மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

அங்ஙனம் வாழ்ந்து வரும் காலத்தில் வசந்த காலம் வந்தது. அக்காலத்தில் திருவாரூரில் இறைவர்க்கு வசந்த விழா நிகழ்வது வழக்கம்! அது சுந்தரர்க்கு நினைவு வந்தது! அவர் திருவாரூர் செல்ல உறுதி கொண்டார். திருவொற்றியூர் எல்லையைத் தாண்டியதும் அவருடைய கண்கள் ஒளிக் குன்றின. திடுக்கிட்டார், மூர்ச்சித்தார். இறைவர் தண்டனை அளித்ததை உணர்ந்து கொண்டார். "சங்கிலியார்க்கு உரைத்த சூள் தவறினேன். அதனால் என் கண்கள் போயின. இறைவனைப் பாடுவேன்" என்று "அழுக்கு மெய்கொடு" என்ற பதிகத்தைப் பாடினார். இறைவர் அருள் செய்யவில்லை. எனினும் தம் உறுதியில் தளராது அடியார் வழிகாட்டச் செல்லலானார். வடதிருமுல்லை வாயில் என்ற தலத்துக்கு வந்தார். அங்கு இறைவரைப் பாடித் திருவெண்பாக்கத்தை அடைந்தார். "எம் இறைவ! நீவிர் கோயிலுக்குள் இருக்கின்றீரா" என வினவினார். "ஆம் இருக்கின்றோம் நீவிர் செல்லும்!" என்ற இறைவர் அவருக்கு ஊன்றுகோல் ஒன்றை அளித்தார். பின்பு திருவாலங்காடு, திருவூறல் என்பனவற்றை வணங்கிக் காஞ்சித் தலத்தை அடைந்தார். அங்கு ஏகாம்பரரிடம் "கண் அளித்தருள்வாய்" என வேண்டினார். முக்கண்ணர் தன் அடியவனான சுந்தரருக்கு இடக்கண்ணை அளித்தார். சுந்தரர் மகிழ்ந்தார் "ஆலந்தான் உகந்து அமுது செய்தானை" என்ற பதிகத்தை அவர் பாடினார்.

அவரது திருவுள்ளம் ஆரூரை நோக்கியது. பல பதிகளை வணங்கித் திருத்துருத்தியை அடைந்தார். அங்கு அவர் உடலில் புதிய நோய்

தோன்றியது. அங்கு இறைவரிடம் சென்று தம் நோயை போக்கியருளுமாறு வேண்டிஉரைத்தார். அக்குளத்தில் அவர் மூழ்கி எழுந்ததும் அவரைப்பற்றியிருந்த நோய் நீங்கியது. மகிழ்ந்து கோயிலுக்குள் போய், "மின்னுமா மேகங்கள்" என்ற பதிகத்தை பாடினார்.

பலபதிகளையும் வணங்கிய பின்பு திருவாரூரை அடைந்தார். ஒரு கண்ணால் இறைவரைக் கண்டு வணங்கினார். துயரக் கடலிலிருந்து என்னை எடுத்தருள்வாய் என்று வணங்கினார். "மீளா அடிமை" என்ற பதிகத்தைப் பாடினார். இறைவர் அவர்க்கு வலக்கண்ணையும் அளித்தார்.

சுந்தரர் பிரிந்து சென்றபின் பரவையார் பிரிவு துன்பத்தால் வாட்டம் அடைந்தார். அவர் சுந்தரர் சங்கிலியாரை மணந்ததைப் பற்றி அறிந்து சினம் கொண்டிருந்தார். அவரது இல்லத்தை நோக்கி வழக்கம் போல் சுந்தரருடன் செல்லும் பரிவாரம் சென்றது. அவர்களுக்குத் தம் மாளிகையில் பரவையார் இடம் தரவில்லை எனவே அவர்கள் சுந்தரரிடம் போய் நிகழ்ந்ததை உரைத்தனர். அதனால் பெரியோர் சிலரைப் பரவையாரிடம் அனுப்பி வைத்தார். ஆயினும் அவர்களால் அம்மையாரின் சினத்தைத் தணிக்க இயலவில்லை. இதை யறிந்த சுந்தரர் துன்புற்றார். இரவில் அவருக்குத் தூக்கம் வரவில்லை! ஊரும் அடங்கிற்று. அதனால் இறைவரிடம் தம் துன்பத்தைத் தீர்க்க வேண்டினார். அவர சுந்தரரிடம் போய் "உனக்கு ஏற்பட்ட துன்பம் யாது?" என்று வினவினார். அவர் உற்றதை உரைத்தார். அன்றிரவே பரவையாரிடம் சென்று அவளது ஊடலைத் தணிக்க வேண்டும் என்றார். இறைவன் அவர்க்கு ஆறுதல் அளித்து விட்டு அந்தணர் போன்ற கோலத்தில் பரவையாரிடம் சென்றார். வந்த காரணத்தைப் பரவையார் வினவ, அவர்க்குச் "சுந்தரர் அங்கு வரும்படி சினம் தணிய வேண்டும்" என்றார். பரவையார் "திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்த அவருக்கு இங்கு இடமில்லை" என்று கூறினார். இறைவன் திரும்பி வந்து சுந்தரரிடம் நிகழ்ந்ததை நிகழ்ந்தாங்கு உரைத்தார். சுந்தரர் இறைவன் உரைத்ததைக் கேட்டு மனம் சோர்ந்து "என்னைப் பரவையாரிடம் சேரும்படி செய்யாவிட்டால் உயிர் விடுவேன்!" என்று உறுதிபடச் சுந்தரர் உரைத்தார். எனவே இறைவர் திரும்பவும் பரவையாரிடம் செல்லத் தொடங்கினார்.

இதற்கு இடையே பரவையார் இல்லத்தில் சில அதிசயங்கள் தோன்றின. அவற்றால் மறையவராய் வந்தவர் இறைவரே என உணர்ந்தார். தன் அறியாமைக்காக அவர் வருந்தி "என் செய்வேன்!" என்று கலங்கினார்.

இப்போது சிவபெருமான் தம் உண்மைக் கோலத்துடன் பரவையாரிடம் சென்றார். தேவர்களும் முனிவர்களும் அவர்களைச் சூழ்ந்து சென்றனர். ஆதலால் பரவையார் மகிழ்ச்சியடைந்து இறைவரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

"என் தவப்பயனாய்த் தாங்கள் இங்கு வரப்பெற்றேன்! அடியார் பொருட்டு ஓர் இரவு முழுதும் இங்கும் அங்கும் அலைந்தீர்! தாங்களே வந்தபின் நான் உடன்படாது இருக்க இயலுமா?" என்றார். அம்மையாரின் சினம் தணிந்தது! இறைவர் சுந்தரரிடம் போய் நிகழ்ந்ததைக் கூறினார்.

சுந்தரர் பரவையார் இல்லத்துக்குப் பறந்தார். பரவையார் அவரை வாயிலில் நின்று வரவேற்றார்.

இருவரும் இன்புற்றிருந்தனர்.

இது இவ்வாறிருக்க, கலிக்காமர் என்னும் சிவனடியார் சுந்தரர் இறைவரைத் தூதாய்ப் பரவையாரிடம் அனுப்பினார் என்பதை அறிந்தார், வெதும்பினார், அதிசயதித்தார்.

"வேத முதல்வரை, ஓர் அடியார் பெண் ஒருத்தியிடம் தூதாக அனுப்பியது நன்று!" என அளவற்ற சினம் கொண்டிருந்தார். "அவனும் ஓர் அடியவனா !" என்று வெறுப்புக் கொண்டார். "அவனை நான் காணின் என்ன நிகழுமோ !" எனச் சினம் கொண்டார்.

அங்ஙனம் தம்மிடம் பகைமை கொண்டிருப்பதைச் சுந்தரர் அறிந்தார். தமக்கும் அவருக்கும் இடையே ஏற்பட்டுள்ள பகைமையைத் தீர்க்கும்படி ஈசனிடம் வேண்டினார். ஈசன் ஏயர்கோன் கலிக்காமருக்குச் சூலை நோயை அளித்தார். அது அவரைத் துன்புறுத்தியது. அவர் இறைவனை நோக்கித் தம் நோயைத் தீர்த்ருள வேண்டும் என்று வேண்டினார். இறைவன் அவரிடம் "உன் நோயைச் சுந்தரன் தீர்தாலன்றித் தீராது" என்று கனவில் உரைத்தார்.

"என் தந்தை மூதாதையர் எல்லாம் நின்னையே வழிபடுவர். அங்ஙனம் இருக்க, உம்மால் வலிய ஆட்கொள்ளப் பட்டவனா என் நோய் தீர்ப்பவன். அதைவிட இந்நோய் தீராமல் இருப்பதே சிறந்தது!" என்றார் கலிக்காமர்.

ஈசன் சுந்தரரிடம் சென்று "ஏயர்கோன் சூலை நோயால் துன்பம் அடைந்துள்ளான். அவன் நோயை நீ சென்று தீர்ப்பாயாக!" என்றார்.

சுந்தரர் அக்கடமையைத் தலைமேற்கொண்டு தன் வருகையைக் கலிக்காமருக்கு ஆட்கள் மூலம் தெரிவித்தார். அதைக் கேட்ட மாத்திரத்தில் வருந்தி, "அவன் வந்து சூலை நோயைத் தீர்ப்பதைவிட இந்நோய் உள்ள வயிற்றைக் கிழிப்பேன்!" என்று உடைவாளால் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிர்விட்டார் கலிக்காமர். உயிருடன் சூலை நோயும் தீர்ந்தது! அவருடைய மனைவியாரும் உயிர்விடத் துணிந்தார். அப்போது "சுந்தரர் வந்துவிட்டார்" என்று சுந்தரருக்கு முன் வந்தவர் உரைத்தார். உடனே அவர் தம் கணவரின் உடலை மறைத்து வைத்துவிட்டு வீட்டை அலங்கரிக்குமாறு கூறிவிட்டுச் சுந்தரரை எதிர்கொள்ளச் சென்றார். சுந்தரர் கலிக்காமர் இல்லத்தில் வந்து அமர்ந்தார்.

"கலிக்காமரின் சூலை நோயைப் போக்கி அவருடன் மகிழ்ந்திருக்க காலம் தாமதம் ஆவதற்கு வருந்துகிறேன்" என்றார்.

"கலிக்காம நாயனார் உள்ளே பள்ளி கொள்கின்றார். அவருக்கு ஒரு கெடுதியும் இல்லை!" என்று பணி மக்கள் கூறினர். "ஒன்றும் கெடுதி இல்லையாயினும் நான் அவரைக் காணவேண்டும்!" என்றார். கலிக்காமரின் மனைவியார் சுந்தரரை அழைத்துக்கொண்டு போய்க் கலிக்காமரைக் காண்பித்தார். நிகழ்ந்திருப்பதைப் பார்த்துச் சுந்தரர் திகைப்படைந்தார். "நல்லது! இவரோடு நானும் உயிர் துறப்பேன்!" என உடைவாளை எடுத்தார். அவ்வளவில் கலிக்காமர் இறைவர் அருளால் உயிர்பெற்றார். பெற்றவர் சுந்தரரின் கைவாளைப் பற்றிக் கொண்டார். அவரது கையிலிருந்த வாளைப் பற்றிக்கொண்டு சுந்தரரின் அடிகளில் வீழ்ந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். அவரிகளிடையே நட்பு புத்தொளி பெற்றது.

இது இவ்வாறு இருக்க சேரநாட்டை "கழறிற்று அறிவார்" என்ற மன்னர் ஆண்டு வந்தார். அவரைச் சேரமான் பெருமாள் எனவும் அழைப்பர். ஒருநாள் வழக்கம் போல் அவர் பூசையின் முடிவில் கேட்கக்கூடிய சிலம்பின் ஒலி கேட்கவில்லை. "அடியேன் இன்று செய்த பிழை யாது?" என்று கலங்கினார். தன் உடைவாளை எடுத்துத் தற்கொலை செய்துகொள்ள முயன்றார். அதனால் இறைவர் சிலம்பின் ஒலி அதிகமாகக் கேட்கும்படி செய்தார். உடனே கழறிற்றறிவார் உடை வாளைக் கீழே விடுத்தார். "சிலம்பொலி கேட்பிக்கக் காலம் தாழ்த்ததேன்?" என இறைவனிடம் வினவினார்.

"தில்லையில் என் நடனத்தை கண்டு சுந்தரன் பாடல் பாடினான். அந்த இன்பத்தில் மூழ்கியதால் இங்கு வரக் காலம் தாழ்த்தது" என்றார் இறைவர் அசரீரியாய்! அவ்வாறு கூறுவதன் மூலம் சுந்தரரைச் சேரமானுக்கு நினைவூட்டினார், உடனே அவர் சிதம்பரத்துக்குச் சென்று கூத்த பெருமானைப் "பொன் வண்ணத்தந்தாதி" பாடி வணங்கினார், ஆடும் சிலம்பபொலி கேட்க அருள்செய்தார் இறைவர். பின்பு திருவாரூர் போய் சுந்தரரையும் வணங்கி அங்குக் கோயிலுக்குச் சென்று "திருவாரூர் மும்மணிக்கோவை" என்ற நூலைப் பாடியருளினார்.

சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தனர், பின் இருவரும் பாண்டி நாட்டுக்குப் புறப்பட்டனர். பல பதிகளை வணங்கித் திருமறைக் காட்டை அடைந்து இறைவரை வணங்கினர். கோயில் கதவு திறக்கவும் மூடவும் பாடிய திருநாவுக்கரசர் ஞானசம்பந்தர் ஆகியவரின் திறங்களைப் பாராட்டி மதுரைக்குச் சென்றனர்.

சுந்தரர் பதிகம் பாடி வணங்கினார். சேரமான் தமக்கு இறைவர் திருமுகம் அனுப்பிய திறத்தைச் சொல்லி உருகினார். சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தனர். பின் திருக்குற்றாளம், திருநெல்வேலி, திருஇராமேச்சரம் முதலான பதிகளை வணங்கினார். இராமேச்சரத்தில் இருந்தபடி ஈழநாட்டுத் தலங்களை எண்ணி வணங்கினார். பின் கானப்பேர் என்ற தலத்திற்குச் சென்று வணங்கித் திருவாரூரை அடைந்தனர். அங்கு பரவையார் இருவருக்கும் விருந்தளித்தார்.

அங்குப் பல நாட்கள் சேரமான் தங்கியிருந்தார். பின் சுந்தரரைத் தம் நாட்டுக்கு அழைத்துச் செல்ல எண்ணினார் சேரமான். பரவையாரின் இசைவைப் பெற்றுச் சுந்தரரை அழைத்துச் சென்றார். வழியில் பல பதிகளை வணங்கியபடி சென்றனர். காவிரியின் தென்கரை வழியே அவர்கள் சென்றபோது வடகரையில் திருவையாறு தெரிந்தது. அங்கு ஐயாற்று இறைவரை வணங்கவேண்டும் எனச் சேரமான் விரும்பினார். சுந்தரர் அப்போது "பரவும் பரிசு ஒன்று" என்ற தொடக்கமுடைய பதிகத்தைப் பாடினார். அவ்வளவில் மேல் பக்கத்து நீர் பளிங்கு மலைபோல் அசைவற்று விளங்கியது. கீழ்பக்கத்து நீர் வடிந்தது. இடையில் வழி உண்டாகியது. அவ்வழியில் சென்று ஐயாறு ஐயனை வழிபட்டனர் அவ்விருவரும். மீண்டும் அவர்கள் தென்கரைக்கு வந்தபோது காவிரி பழையபடி ஓடியது. அவ்விருவரும் சேரநாட்டை அடைந்தனர். மக்கள் மகிழ்ந்து நெகிழ்ந்து அவர்களை வரவேற்றனர். அன்பு அலைகள் எங்கும் எழுந்தன.

சேரமான் தம் அரண்மனைக்குச் செல்லாது திருவஞ்சைக் களத்துக்குச் சென்றார். சுந்தரர் அங்கு "முடிப்பது கங்கையும் திங்களும்" என்ற பதிகத்தைப் பாடினார்.

சுந்தரரை யானைமேல் ஏற்றிச் சேரமான் அவருக்குக் கவரி வீசினார். இருவரும் அரண்மனையை அடைந்ததும் சுந்தரரை அழைத்துச் சென்று தம் அரியணைமேல் அமருமாறு செய்தார். தம் தேவியர் கொணர்ந்த நீரைச் சுந்தரர் திருவடியில் சொரிந்தார் சேரமான், விளக்கத் தொடங்கினார். சுந்தரர் அதனைத் தடுத்தார். "தம் தகுதிக்கேற்பச் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். பெரும் பூசையைச் சுந்தரருக்குச் செய்தார். சுந்தரர் அங்குப் பல நாட்கள் தங்கியிருந்தார்.

சேரநாட்டில் இருந்த சுந்தரருக்குத் திருவாரூர்க்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனைச் சேரர்க்குச் சுந்தரர் உரைத்தார். "உம்மை பிரிந்து எங்ஙனம் வாழ்வேன்?" எனக் கலங்கினார். பின்பு எல்லாப் பொருள்களையும் தந்து அவரை அனுப்பி வைத்தார். திருமுருகன் பூண்டி என்ற இடத்துக்கு வரும்போது பெருமான், தம் தூண்டுதலால் பூதங்கள் வேடர் வடிவுடன் வந்து, கொண்டு போகும் பொருட்களை கவரும்படி செய்தார். அதனை அறிந்த சுந்தரர் திருமுருகன் பூண்டி

கோயிலுக்குச் சென்று "கொடுகு வெஞ்சிலை" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். உடனே வேடுவர் பறித்துச் சென்ற யாவும் அங்கு வந்து குவிந்தன. அவற்றை அடியார் எடுத்துக்கொண்டனர். சுந்தரர் திருவாரூர் அடைந்தார். சேரமான் சுந்தரரை எண்ணி நாட்டை நன்கு ஆண்டு வந்தார்.

(கயிலைக்கு செல்லுதல்)

திருவாரூரில் தங்கியிருந்த சுந்தரர் சேரமானைக் காணவேண்டும் என்று எண்ணினார். சோழ நாட்டில் உள்ள பதிகள் பலவற்றையும் வணங்கியபடி மேற்கு கொங்கு நாட்டில் உள்ள திருப்புக்கொளியூரை அடைந்தார். அந்தணர் வாழும் தெருவில் இரு எதிர் எதிர் வீடுகளில் ஒன்றில் அழுகை ஒலியும், மற்றொன்றில் மங்கல ஒலியும் எழுந்தன. "அவற்றின் காரணம் யாது?" என்று அங்கிருந்த மறையவரைச் சுந்தரர் வினவினார். "ஐந்து வயதுடைய இரு சிறுவர் நீர்நிலையில் குளிக்க சென்றனர். அவருள் ஒருவனை முதலை விழுங்கியது. எனவே அம்மகன் வீட்டில் அழுகை ஒலி, உயிர் தப்பிய சிறுவனுக்குப் பூணூல் அணியும் விழா. எனவே மங்கல ஒலி" என்று அந்தணர் உரைத்தனர்.

பின் மகனை இழந்த பெற்றோர் சுந்தரர் அங்கு வந்ததை அறிந்து தம் துன்பத்தை மறைத்துக்கொண்டு வந்து வணங்கினர். அவர் "இவர்கள் தம் மகனை இழந்த வருத்தத்தை மறைத்து என்னை வணங்க வந்தனர். ஆதலால் இவர்கள் மகனை எழுப்பித் தந்தபின் அவிநாசி இறைவனை வணங்குவேன்!" என்று எண்ணினார். பின், "மகனை விழுங்கிய மடு எங்கே?" எனக் கேட்டறிந்து அங்கே சென்றார். "உரைப்பார் உரை" என்று தொடங்குகின்ற பதிகத்தைப் பாடினார். மகனை முன்னம் விழுங்கிய முதலையானது கரையில் அம்மகனை உமிழ்ந்தது. வேதம் ஒலித்தது. பின் அம்மகனுக்குப் பூணூல் அணிவிழாவும் நடைப்பெற்றது.

"முதலையுடன் பாலனை மீட்டுத் தந்தார்" என்ற செய்தியும், "அவர் தம்மைக் காண வருகின்றார்" என்ற செய்தியும் சேரமானுக்கு எட்டின.

"என் ஐயன் வந்தார்! என்னை ஆளும் இறைவன் வந்தார்! ஆரூர் சைவன் வந்தார்! என் நண்பன் வந்தார்!" என்று பறையறையும்படி, சேரமான் பெருமாள் ஆணையிட்டார். அவரது ஆணையினால் அந்நகரம் அணி செய்யப்பட்டது.

சேரமான், சுந்தரரை எதிர்க்கொண்டு தொழுது வரவேற்றார். சுந்தரரும் அவரைத் தொழுதார். இருவரும் உரையாடி மகிழ்ந்தனர். இருவரும் வஞ்சி நகரத்தை அடைந்தனர்.

அந்த நாட்டின் உள்ள தலங்கள் பலவற்றையும் அவ்விருவரும் சென்று வணங்கினர். ஒருநாள் சுந்தரர் தனியாய்த் திருவஞ்சைக்களம் என்ற கோயிலுக்குச் சென்றார். தம் இல்லற வாழ்வை விலக்கிட வேண்டும்

என்ற பொருள்படத் "தலைக்கு தலை மாலை" என்ற பதிகத்தைப் பாடினார். இறைவன், சுந்தரர் இவ்வுலகத்தில் இருக்க வேண்டும் என்று நியமித்த நாட்கள் முடிந்தன. ஆதலால் அவர் தம் கயிலையை அடைய அருள் செய்யலானார். தேவர்களை நோக்கிச் "சுந்தரரை வெள்ளை யானை மீது ஏற்றி இங்குக் கொணர்க" என்று சிவபெருமான் ஆணையை அவர்க்கு உரைத்து வெள்ளை யானை மீது அவரை அமரச் செய்து அழைத்துச் சென்றனர்.

சுந்தரர் கயிலைக்குச் செல்கிறார் என்பதைச் சேரமான் பெருமாள் உணர்ந்தார். அவர் தாம் ஒரு குதிரை மீது ஏறி அதன் காதில் மந்திரத்தை ஓதினார். அது விரைந்தது. சுந்தரர் ஏறிச்சென்ற யானையை வலமாக வந்து முன்னால் சென்றது.

சுந்தரர் கயிலை மலையின் தெற்கு வாயிலில் வந்து "தான் எனை முன் படைத்தான்" என்ற பதிகத்தைப் பாடினார். சேரமான் இறைவன் அருளால் தடைப்பட்டு அங்கே நின்றார். சுந்தரர் தடையற்று இறைவரின் முன் சென்றார். "ஆரூர! வா !" என்றார் சிவபெருமான். தம்மை அவர் தடுத்தாட்கொண்ட திறத்தை அவர் எண்ணி மகிழ்ந்தார். "எம் இறைவ! சேரமான் வந்துள்ளார்" என்று அறிவித்தார். "அவரை இங்கு அழைத்து வருக!" என்றார் இறைவர். சேரமானை இறைவரின் திருமுன்பு அழைத்துச் சென்றனர்.

"நாம் அழைக்காமல் நீ இங்கு ஏன் வந்தாய்?" என்று சிவபெருமான் சேரமானை நோக்கி வினவினார். "யான் சுந்தரரை தொழுதவண்ணம் வந்தேன். உன் கருணை வெள்ளம் என்னை இங்கு கொணர்ந்து சேர்த்தது. என் விண்ணப்பம் ஒன்றுள்ளது. யான் பாடிய ஞான உலாவைக் கேட்டருளல்" , என்றார். "பாடுக!" என்றார். இறைவர் "நீயும் நம் சுந்தரருடன் கணநாதனாக இங்கு இருப்பீராக !" என்று அருள் செய்தார்.

வன்றொண்டர் பழையபடி ஆலால சுந்தரர் ஆனார். சேரர் பெருமான் கணநாதராய் விளங்கினார். பரவையார் சங்கிலியார் என்னும் இருவரும் பழையபடி "கமலினி", "அநிந்திதை"யராய்க் கயிலையில் உமையம்மையாரின் ஏவல் மங்கையராய் இருக்கலாயினர். ஆலால சுந்தரர் அருளிய தேவாரப்பதிகங்கள் வருணனுக்கு அருளப்பட்டன. அவன் திருவஞ்சைக் களத்தில் கொண்டு சேர்த்தான்.

சேரமான் பாடிய ஞானவுலாவைக் கயிலாயத்தில் கேட்ட மாசாத்தனார் திருப்பிடவூரில் வேதியர்க்கு அருளி உலகத்தில் வழங்கி வரும்படி செய்தார்.

### 4.2.1 வரலாற்றுக் குறிப்பு

| | |
|---|---|
| பிறந்த ஊர் | திருநாவலூர் |
| நாடு | திருமுனைப்பாடி நாடு |
| தாய் | இசைஞானியார் |
| தந்தை | சடையனார் |
| குலம் | ஆசிசைவர் |
| மதம் | சைவம் |
| காலம் | 9ம் நூற்றாண்டு |
| வேறு பெயர்கள் | வன்தொண்டர், ஆரூரன், திருநாவலூரன், ஆளுடையநம்பி, தம்பிரான் தோழர் |
| மனைவியர் | பரவையார் ( கமலினியார்) சங்கிலியார்( அனிந்திதையார்) |
| சமகால அரசன் | நரசிங்கமுனையரையர் |
| முத்தி பெற்ற இடம் | கயிலாயம் |
| வயது | 18 |
| குருபூசை நட்சத்திரம் | ஆடிச் சுவாதி |
| பாடிய பாடல்கள் | ஏழாம் திருமுறை |
| மொத்த பதிகங்கள் | 100 |
| மொத்த பாடல்கள் | 1026 |
| பாடிய தமிழ் | விஞ்சு தமிழ் |
| வழிபட்ட நெறி | தோழமை |

## 4.3 மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு

மாணிக்கவாசகர் பாண்டிவள நாட்டில் வைகையாற்றங்கரையில் உள்ள திருவாதவூர் என்னும் திருப்பதியில் அமாத்தியர் என்னும் அந்தணர் குடியில் தோன்றியவர். வாதவூரர் என்பது இவருக்குத் தந்தையார் இட்ட பிள்ளைத் திருப்பெயர். பதினாறு ஆண்டு நிரம்புமுன் கலைகள் யாவும் பயின்று உணர்ந்து நல்லொழுக்க நலம் விரும்பி, யாவரும் வியந்து போற்றுமாறு விளங்கினார். இவரது கீர்த்தியைக் கேட்ட அரிமர்த்தன பாண்டியன் இவரை அழைப்பித்து இவர்பால் மிளிரும் கூரிய அறிவினைக் கண்டு குணப்பெருங் குன்று என்று பாராட்டித் தனக்கு முதல் அமைச்சராக ஆக்கினன்.

இங்ஙனம் அமைச்சுத் தொழில் நடாத்துகையில் அடிகளுக்கு உலக வாழ்க்கையில் உவர்ப்புத் தோன்றி உயிர்க்கு உறுதி யாது எனவும், அதனைப் பெறுவது எவ்வாறு எனவும் உசாவினார். கேட்டனவெல்லாம் நீர்விடாய்க்கு உண்ட உவர்நீர் போல் வேட்கையை மிகுவித்தன. இவர் அதனைத் தணிக்கவல்ல நல்லாசிரியரை எதிர்பார்த்திருந்தார்.

அங்ஙனமிருக்கையில் அரசன் அடிகளைக் கீழ்க்கடல் துறைக்குச் சென்று குதிரை வாங்கி வரும்படி ஏவினன். அங்ஙனமே அடிகள் அளவிறந்த பொற்குவைகளை கைக்கொண்டு செல்லும் வழியில் திருப்பெருந்துறையை அடைந்தார். அடிகள் அங்கே குருந்த மரத்தடியில் அருளாசிரியாராய் எழுந்தருளியிருந்த பெருமானைக் கண்டு காந்தத்தை எதிர்ந்த இரும்பு போல் இழுப்புற்றார். ஆனந்தங்கொண்டு பன்முறை வணங்கிப் பாடி ஆடி, "பெரும! அடியேனை ஆட்கொண்டு உய்விக்க வேண்டும்" என்று வேண்டினார்.

அவர்பால் கடவுள், உயிர், உலகம் என்னும் முப்பொருள் உண்மைகளைத் திரு ஐந்தெழுத்து அடைவால் அருளப்பெற்றார். அவ்வருட் பொருளை ஐயந்திரிபின்றி அங்கையில் நெல்லிக்கனியெனப் பெற்ற அடிகள் சிவபெருமானிடத்து அன்பு மீக்கூர்ந்தவராய் ஞான வாணியின் நல்லருளால் அருட்பாடல்களைப் பொழிவார் ஆயினார்.

அவற்றைக் கேட்டருளிய சிவபெருமான் திருவுளங் களிகூர்ந்து, அவரது திருவாயினின்றும் பிறந்த வாசகங்கள் விலை

யேறப்பெற்ற மாணிக்கங்கள் போன்று இருந்தமையால் அவருக்கு மாணிக்கவாசகர் என்னும் திருப்பெயரளித்து மறைந்தருளினார்.

பின்பு அடிகள் குதிரை வாங்க கொண்டு சென்ற பொருளைச் சிவன் கோயில் திருப்பணிக்கும் சிவனடியார்களுக்கும் செலவிட்டு, சிவ வழிபாட்டில் ஆழ்ந்திருந்தார். இதனைக் கேள்வியுற்ற பாண்டியன் சினந்து அடிகளைத் திரும்பி வருமாறு சீட்டு ஒன்று அனுப்பினான். அடிகள் அதனைப் பெருமானுக்கு அறிவித்து முறையிட்டார். அவர் தந்த விலை உயர்ந்த மாணிக்மொன்றைப் பெற்றுக்கொண்டு பாண்டியன்பாற் சென்று அதனை அவனிடம் கொடுத்தார். "அரசே! குதிரைகள் ஆவணித் திங்கள் மூலநாளில் வரும்" என்றார்.

அதனை மெய்யெனக் கொண்டிருந்த அரசன் ஒற்றரால் பொய்யென அறிந்தான். அவரைச் சிறையிலிருத்தி வருத்தினான். அவர் வருத்தங் கண்டு பொறாத சிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கிக் கொணர்ந்து அரசான் பால் ஒப்படைத்தார். பின் அவற்றை மீளவும் நரிகளாக்கினார். அவை முன்னுள்ள குதிரைகளுக்கும் ஊறு செய்து சென்றன. அது அறிந்த அரசன் அடிகளைச் சுடுமணலில் கல்லேற்றி நிறுத்தினான்.

அது தெரிந்த பரம்பொருள் வைகையாற்றில் நீரை ஊழிக் காலத்து வெள்ளமெனப் பெருக்கி மதுரை ஒழியுமோ என அச்சுறுத்தினார். அஞ்சிய அரசன் ஊர் மக்களை அழைத்துக் கரையை அடைக்க ஆணையிட்டான். பராபரன் வந்தி என்னும் பிட்டு வாணிச்சிக்குக் கூலியாளாய் வந்து, மண் சுமந்து, அடிபட்டு அடிகள் பெருமையை அரசனுக்கு நன்கு அறிவுறுத்தி மறைந்தருளினான்.

பின் அடிகள் பாண்டியனைத் தேற்றி, மதுரையிலிருந்து புறப்பட்டுத் திருப்பெருந்துறை சென்றார். அங்குச் சின்னாள் இருந்து சிவபெருமான் ஏவியவாறே திருவுத்தர கோசமங்கை முதலிய திருப்பதிகளுக்குச் சென்றார். திருப்பதிகங்கள் பாடித் தில்லையை அடைந்தார். புத்தர்களோடு வாது புரிந்து வென்று, ஊமைப்பெண்ணைப் பேசுவித்தார்.

அங்கு அடிகள் சிவயோகத்தில் திளைத்திருந்தார். அப்போது சிவபெருமான் ஓர் அந்தணராகி அடிகளை அடைந்து அவர் தில்லையிலும் மற்றும் பல சிவத்தலங்களிலும் ஓதியருளிய திருப்பாடல்களை எல்லாம்

சொல்லத் தொகுத்து, "திருவாசகம்" எழுதித், திருக்கோவையார் பாடுவித்து அதனையும் எழுதித் கைச்சாத்திட்டுத் திருவம்பலப்படியில் வைத்து மறைந்தருளினார். அதன்பின் தம்மையடைந்து திருமுறையின் பொருள் வினாவிய திருமறையாளர் மூவாயிரவரையும் விட்டு, அடிகள் பொற்சபை புகுந்து சிவபெருமானைப் பொருளெனக் காட்டித் திருவருளில் இரண்டறக் கலந்தார். இவருடைய திருநட்சத்திரம் ஆனிமாதம் மகம். இவர் வாழ்ந்த காலம் 32 ஆண்டுகள்.

அடிகள் வரலாறு கூறும் புராணங்கள்

1. திருவுத்தர கோசமங்கைப் புராணம்
2. திருவாதவூரர் புராணம்
3. திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்
4. பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற்புராணம்
5. திருப்பெருந்துறைப் புராணம்

மேற்கண்ட புராணங்கள் ஐந்தனுள்ளும் அடிகள் வரலாற்றில் சிற்சில வேறுபாடுகள் உள.

மறைமலையடிகள், இவர் வாழ்ந்த காலம் கி.பி மூன்றாம் நூற்றாண்டு என்பர். ஆயின் அறிஞர் பலர் ஒன்பதாம் நூற்றாண்டில்தான் இவர் வாழந்திருந்தார் என்பர்.

### 4.3.1 வரலாற்றுக் குறிப்பு

| | |
|---|---|
| பிறந்த ஊர் | திருவாதவூர் |
| நாடு | பாண்டிய நாடு |
| தாய் | சிவஞானவதியார் |
| தந்தை | சம்புபாத இருதயர் |
| குலம் | அமாத்தியர் |
| மதம் | சைவம் |
| தொழில் | அமைச்சர் |
| காலம் | 9ம் நூற்றாண்டு |
| வேறு பெயர்கள் | திருவாதவூரார், ஆளுடைய அடிகள் |
| சமகால அரசன் | அரிமர்த்தன பாண்டியன் |
| முத்தி பெற்ற ஊர் | சிதம்பரம் |
| வயது | 32 |
| குருபூசை நட்சத்திரம் | ஆனி மகம் |
| பாடிய பாடல்கள் | எட்டாம் திருமுறை |
| மொத்த பாடல்கள் | 1056 |
| பாடிய தமிழ் | மிஞ்சு தமிழ் |
| வழிபட்ட நெறி | அறிவு |

## 5. பயிற்சிப் பகுதி.

***சில மாதிரி வினாக்கள்***

### தெரிவு வினாவிடை

1. சுந்தரமூர்த்தி நாயனார் பிறந்த ஊர் எது?
    1. திருவெண்ணெய் நல்லூர்
    2. திருநாவலூர்
    3. திருவாதவூரர்
    4. திருஆலவாய் ( )

2. சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார்?
    1. விநாயகர்
    2. முருகர்
    3. சிவபெருமான்
    4. திருமால் ( )

3. சிவபெருமானின் தோழர் யார்?
    1. திருஞானசம்பந்தர்
    2. திருநாவுக்கரசர்
    3. சுந்தரமூர்த்தி நாயனார்
    4. மாணிக்கவாசகர் ( )

4. எட்டாம் திருமுறை உள்ள நூல் எது?
    1. தேவாரம்
    2. திருவிசைப்பா
    3. திருக்கோவையார்
    4. திருத்தொண்டர் புராணம் ( )

**தொடர்புடைய சரியான சொற்களைக் கோடிட்டு இணைக்கவும்**

| | |
|---|---|
| நலங்கொள் ☼ | ☼ சாதாரி |
| தலையே நீ வணங்காய் ☼ | ☼ இந்தளம் |
| சொற்றுணை வேதியன் ☼ | ☼ காந்தார பஞ்சமம் |
| பொன்னார் மேனியனே ☼ | ☼ நட்டபாடை |
| வெம்புந்திய ☼ | ☼ தக்கராகம் |

**சரியான துணைச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை நிறைவு செய்க**

1. திருமுனைப்பாடி நாட்டில் __________________________ பிறந்தார்.

2. சுந்தரமூர்த்தி நாயனார் தீர்த்தயாத்திரை சென்ற போது திருவதிகை என்னும் ஊரில் _________________ உழவாரம் செய்த சித்தமடத்தில் தங்கி தூங்கினார்.

3. _____________________ நாயனாருக்கு ஏற்பட்ட சூலை நோயைத் தீர்க்கச் சுந்தரமூர்த்தி நாயனாரைச் சிவபெருமான் அனுப்பினார்.

4. ______________________சுந்தரமூர்த்தி நாயனாரைக் கண்டு நட்புப்பூண்டு இருவருமாகப் பல தலங்களுக்குச் சென்று சிவபெருமானை வணங்கினர்.

5. __________________________ சுந்தரர் மீது அன்பு பூண்டு தம் வளர்ப்பு பிள்ளையாக வளர்த்து வந்தார்.

| | |
|---|---|
| நரசிங்கமுனையர் | திருஞானசம்பந்தர் |
| சுந்தரமூர்த்தி நாயனார் | சடையனார் |
| திருநாவுக்கரசர் | பரவையார் |
| கலிக்காமர் | சேரமான் பெருமாள் நாயனார் |

**பொருத்தமான துணைச் சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக**

1. தாளம் பெற்ற பதிகம் ____________________

2. திருஅங்கமாலை ____________________

3. திருப்பள்ளியெழுச்சி ____________________

4. நமச்சிவாயப் பதிகம் ____________________

5. திருச்சாழல் ____________________

6. பெரியபுராணம் ____________________

7. திருப்பல்லாண்டு ____________________

| | | | |
|---|---|---|---|
| **சொற்றுணை** | **போற்றி** | **மன்னுக** | **மடையில்** |
| **தலையே நீ வணங்காய்** | **பூசுவதும்** | **வேதநெறி** | |

**கவனமாகப் படி. கேள்விகளுக்கு விடை எழுது**

பாண்டிநாட்டில் மதுரைக்கு வடகிழக்கிலுள்ள திருவாதவூரில் ஆதிசைவ அந்தணர் மரபில், சம்புபாத இருதயருக்கும் சிவஞானவதியம்மைக்கும் மகனாகத் திருவாதவூரர் தோன்றினார். பதினாறாம் வயதிற்குள் கல்வி கேள்விகளுள் தலைசிறந்து விளங்கினார். சைவ நூல்களையும், தத்துவ நூல்களையும், படித்து, பக்தியிலும் இறைவழிபாட்டிலும் சிறந்து நின்றார். இவரது மேன்மையைக் கேட்டுணர்ந்த அரிமர்த்தன பாண்டியன் என்ற மன்னன் இவரை வருவித்துத் "தென்னவன் பிரமராயன்" என்ற பட்டத்தை வழங்கித் தனது அரசவைக்கு முதலமைச்சராக்கி, நிறைய செல்வமுமளித்துச் சிறப்பித்தான். இவர் அறநெறி பிறழாமல் அரசகாரியங்களைக் கவனித்து வந்தார். ஆயினும் அதில் பற்றின்றிப் பேரின்பப் பெருவாழ்வுபெற உண்மையுணர்த்தும் ஞானாசிரியனை நாடி நின்றார்.

1. மாணிக்கவாசகரின் பெற்றோர்கள் யார்?

   ______________________________________________

2. மாணிக்கவாசகரை தமது அரசவைக்கு முதலமைச்சராக்கிய மன்னர் யார்?

   ______________________________________________

3. மாணிக்கவாசகர் பிறந்த ஊரின் பெயர் என்ன?

   ______________________________________________

4. அரிமர்த்தன பாண்டியன் என்ற மன்னன் மாணிக்கவாசகருக்கு தென்னவன் பிரம்பராயன் என்று பட்டம் அளித்ததற்கு காரணம் என்ன?

   ______________________________________________

5. மாணிக்கவாசகர் பயின்ற நூல்கள் எவை எவை?

   ______________________________________________

**கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை எழுதுக**

1. திருநாவுக்கரசர் பாடிய முதல் பாடல் எது?
2. திருமுறைகளின் மொத்த எண்ணிக்கை என்ன**?**
3. திரு முறைகளை அருளிய ஆசிரியர்கள் மொத்தம் எத்தனை பேர்**?**
4. சுந்தரருக்குச் சிவபெருமான் ஊன்றுகோல் அளித்த தலம் எது?
5. சுந்தரர் முதலை உண்ட பாலகனை உயிருடன் எழுப்பிய ஊர் எது?
6. மாணிக்கவாசகச் சுவாமிகளுடைய பெற்றோர்கள் யார்**?**
7. மாணிக்கவாசகச் சுவாமிக**ள்** முத்தி பெற்ற தலம் எது?
8. சுந்தரர் மணந்துகொண்ட பெண்கள் யாவர்?
9. திருஞான சம்பந்தர் தாளம் பெற்ற தலம் எது?
10. சைவச் சமயத்தோர் உடம்பில் அணிய வேண்டிய அடையாளம் யாது?

# 6. பாடத்திட்ட நூலாக்கத்திற்குப் பயன்பட்ட நூல்கள்

**சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு**

பெரியபுராணம் மூலமும் தெளிவுரையும்
உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கனார். தமிழ் பேராசிரியர்

**சைவ சமயம் ஓர் அறிமுகம்**

நன்றி: http://www.shaivam.org

**மாணிக்கவாசக சுவாமிகள் வரலாறு**

நன்றி: திரு எம் நாரயணவேலுப் பிள்ளை